


# தொன் போஸ்கோ கல்லூரி

அதியமான் புறவழிச் சாலை, சோகத்தூர் அஞ்சல், தருமபுரி 636 809

தொலைபேசி : 9443604446, 9443604447

மின்னஞ்சல் : dbc155@live.in இணையதளம் : www.dbcdharmapuri.edu.in


## 01. வரலாறு

**01) தொன் போஸ்கோவின் பிறப்புக் குறித்து எழுதுக.**

தொன் போஸ்கோ என அறியப்படும், ஜான் மெல்கியோர் போஸ்கோ, இத்தாலியின் தூரின் நகரில், பெக்கி என்ற குக்கிராமத்தில், 1815ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 16ஆம் நாள் பிறந்தார்.

**02) தொன் போஸ்கோவின் பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள் யாவர் ?**

தொன் போஸ்கோவின் தந்தை பெயர் பிரான்சிஸ் போஸ்கோ, தாயார் பெயர் மார்கரெட் ஒக்கியானா, மூத்த சகோதரர்கள் அந்தோணி மற்றும் ஜோசப்.

**03) தொன் போஸ்கோவின் தந்தை எப்பொழுது இறந்தார் ?**

1817ஆம் ஆண்டு, தொன் போஸ்கோவிற்கு இரண்டு வயது நடக்கும்போது அவரின் தந்தை இறந்தார்.

**04) இளைஞர் பணி பற்றிய கனவைத் தொன் போஸ்கோ எப்பொழுது கண்டார் ?**

1824ஆம் ஆண்டு, அவரது 9ஆம் வயதில் இளைஞர் பணி பற்றிய கனவைக் கண்டார்.

**05) தொன் போஸ்கோ எவ்வாண்டு, யாரால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் ?**

1841ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் நாள், தூரின் பேராயர் பிரன்சோனி என்பவரால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**06) இளையோர் பணியின் தொடக்க நிகழ்வு யாது ?**

1841ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 8ஆம் நாள் பர்த்தலேமேயோ கரெல்லி என்ற மாணவனைச் சந்தித்ததன் வாயிலாக இளையோர் பணியைத் தொடங்கினார்.

**07) சலேசிய சபை எப்போது தொடங்கப்பட்டது ?**

1854ஆம் ஆண்டு சனவரி 26ஆம் நாள் தனது மாணவர்கள் அடங்கிய சிறு குழுவினருடன் சலேசியர்கள் என்ற பெயரில் சபை தொடங்க வித்திடப்பட்டு, 1859ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் நாள் 1 குருவானவர், 15 இளங்குருமட மாணவர்கள் மற்றும் 1 பள்ளி மாணவருடன் சலேசிய சபை தொடங்கப்பட்டது.

**08) தொன் போஸ்கோ எப்பொழுது இறந்தார் ?**

1888ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆம் நாள் தமது 72ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

**09) தொன் போஸ்கோவிற்கு எப்பொழுது புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது ?**

1934ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள், திருத்தந்தை பதினோராம் பயஸ் என்பவரால் புனிதர் நிலைக்குத் தொன் போஸ்கோ உயர்த்தப்பட்டார்.

**10) இன்றைய உலகில் சலேசியர்கள் பற்றி எழுதுக.**

2019ஆம் ஆண்டுக் கணக்கின்படி, உலகின் 133 நாடுகளில், 1,915 சலேசிய நிறுவனங்களில் 14,614 சலேசியர்கள் இளையோருக்காகப் பணியாற்றுகின்றனர்.

## 02. அன்பும் சேவையும்

**11) தம்மை அன்பு செய்கின்றவர்களுக்கு இறைவன் எவ்வாறு கைம்மாறு செய்கின்றார்?**

"தம்மை அன்பு செய்கின்றவர்களுக்கு நன்மையாக அமையுமாறு கடவுள் அனைத்தையும் திருப்பி விடுகின்றார்."

**12) அடுத்தவரைப் பற்றிக் கருத்துக் கூறுவது குறித்து நாம் அறிய வேண்டியன யாவை?**

"எவர் குறித்தும் கடுமையாகவோ, காயப்படுத்தும் வகையிலோ கருத்துக்கூற வேண்டாமென மிகுந்த ஆதங்கத்தோடு வேண்டுகின்றேன்" என்கின்றார் தொன் போஸ்கோ.

**13) இளையோரின் அன்பைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

"இளையோர் உங்களை அன்பு செய்ய வேண்டுமெனில், நாம் இளையோரை அன்பு செய்வதோடு, நாம் அன்பு செய்கின்றோம் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்ய வேண்டும்" என்பது தொன் போஸ்கோவின் கூற்று.

**14) நாம் ஏன் அயலாரை அன்பு செய்ய வேண்டும்?**

"ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்று நற்செய்தியில் (யோவான் எழுதிய நற்செய்தி) கூறப்பட்டிருப்பது வெறும் வேண்டுகோளன்று, அஃது ஒரு கட்டளை. ஏனெனில் அன்பு செய்யாதவர் பாவம் செய்கின்றார்" என்பதால் அயலாரை நாம் அன்பு செய்ய வேண்டும்.

**15) நாம் எதில் சுறுசுறுப்பாக ஈடுபடல் வேண்டும்?**

"அச்சப்படுவதைவிட்டு, அன்பு செய்வதில் சுறுசுறுப்பாய் ஈடுபட வேண்டும்."

**16) சாத்தானின் பிள்ளைகளிடமிருந்து, கடவுளின் பிள்ளைகளை வேறுபடுத்திக் காட்டுவன எவை?**

"பிறரன்பு செயல்கள் மட்டுமே சாத்தான் மற்றும் உலகோரின் பிள்ளைகளிலிருந்து கடவுளின் பிள்ளைகளைப் பிரித்துக் காட்டுகின்றன."

**17) பிறருக்குக் கொடுத்து உதவுதல் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகின்றார்?**

"நம்மிடத்தில் ஏதுமில்லையேல் அடுத்தவருக்கு எதுவும் தர இயலாது. கொஞ்சம் இருப்பின் கொஞ்சமாவது கொடுக்கலாம். நிரம்ப இருப்பின் நிரம்ப தருவோமாக. எங்ஙனமாயினும் பிறருக்கு உதவுதலொன்றே நமது இறுதி நோக்கமாக இருக்கட்டும்" என்று கூறுகின்றார்.

**18) மனிதர் அனைவரும் எளிதில் செய்யக் கூடிய மிக உயர்ந்த நன்மை எது?**

"நோன்பிருத்தல், இறைத்தொண்டின் மிகக் கடினமானப் பயணத்தை மேற்கொள்ளல், மிகத் தாராளமாக வாரி வழங்குதல் போன்றவை நம் எல்லாராலும் முடியாதுதான். ஆனால் நாம் எல்லாருமே அன்பு செய்ய முடியும்." இதுவே உயர்ந்த நன்மை.

**19) பிறருக்கு உதவுவது குறித்துத் தொன் போஸ்கோ கூறுவது என்ன?**

"நீங்கள் செய்கின்ற அனைத்துமே அடுத்தவருக்கான உதவிகளாக அமையட்டும்" என்று தொன் போஸ்கோ கூறுகின்றார்.

**20) ஏன் அவரசப்பட்டுத் தீர்ப்புக் கூறக் கூடாது?**

"ஒருவரது தவறு பற்றி உனக்குத் தெரியவரும்போது, தீர்ப்புக்கூறுமுன், அது குறித்த தகவல்கள் அனைத்தையும் அறிய முயல்க. ஏனெனில், துரும்பளவு தவறு, தூணளவாகப் பெரிதாக்கப்படுகின்றது என்பதே உண்மை" என்பதால் அவரசப்பட்டுத் தீர்ப்புக் கூறக் கூடாது.

## 03. ஆன்மாவும் வீடுபேறும்

**21) ஒருவரின் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் எந்நோக்கத்திற்காக அமைய வேண்டும்?**

"உன் சிந்தனை, சொல், செயல்கள் அனைத்தும் உமது ஆன்ம நலனுக்கு உகந்தவையாக அமைதல் வேண்டும்" என்கின்றார் தொன் போஸ்கோ.

**22) தொன் போஸ்கோ எதனை வற்புறுத்துகின்றார்?**

"நன்மாதிரிகையாலும், அறிவுரைகளாலும் ஆன்மாக்களைக் காத்துக் கொள்வதில் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டுமென்று நான் உங்களை வற்புறுத்துகின்றேன்" என்று தொன் போஸ்கோ கூறுகின்றார்.

**23) நம் ஆன்மாவைக் காப்பதில் நாம் ஏன் கவனம் செலுத்த வேண்டும்?**

"உனக்குள்ளது ஒரே ஆன்மா! அதை நீ காப்பாயேல் உனக்குள்ள மற்றனைத்தையும் காக்கின்றாய். அதனை இழப்பாயேல், அனைத்தையும் இழக்கின்றாய்" என்பதால் ஆன்மாவைக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**24) ஓநாய்! ஓநாய்! என்று நாம் எப்பொழுது கத்த வேண்டும்?**

"நமது ஆன்மாவைக் கெடுக்கக்கூடிய கெட்ட நண்பர்கள் நெருங்கும்போது, ஓநாய்! ஓநாய்! என்று கத்த வேண்டும்."

**25) தொன் போஸ்கோ அஞ்சுகின்ற இரண்டு எவை?**

"ஆன்மாவைக் கொல்லக் கூடிய கொடிய பாவம், கொடிய பாவம் செய்த நிலையில் சாவை அடைவது" இவ்விரண்டு பற்றியும் தொன் போஸ்கோ அஞ்சுகின்றார்.

**26) தொன் போஸ்கோ அவரசப்படும் இரு செயல்கள் யாவை?**

"ஆன்மீக நெருக்கடியில் இருக்கும் இளைஞனுக்கு உதவுதல், கடவுளுக்காக ஆன்மாக்களை மீட்டல்" ஆகிய இரு செயல்களில் தாம் அவசரம் காட்டுவதாகத் தொன் போஸ்கோ கூறுகின்றார்.

**27) தொன் போஸ்கோ எவற்றிற்காக மற்றனைத்தையும் இழந்துவிடத் தயாராக இருந்தார்?**

"ஆன்மாக்களைத் தாருங்கள்! மற்றனைத்தையும் என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தொன் போஸ்கோ கூறுகின்றார்.

**28) மண்ணக அறிவை எதற்குப் பயன்படுத்த வேண்டும்?**

"விண்ணகத்தை அடையும் படிக்கற்களாக மண்ணக அறிவைப் பயன்படுத்த வேண்டுமென மாணவர்களுக்கு அறிவுறுத்துகின்றேன்" என்கின்றார் தொன் போஸ்கோ.

**29) நமது உழைப்பிலும் துயரிலும் நாம் எதனை மனதில் இருத்தல் வேண்டும்?**

"நமது வேலையில் அல்லது துயரில், நமக்காக வானுலகில் வெகுமதி சேர்த்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மறவாமலிருப்போம்."

**30) இவ்வுலகப் பயன்கருதி உழைப்பு வீண் என்று தொன் போஸ்கோ ஏன் கூறுகின்றார்?**

"இவ்வுலகப் புகழ்ச்சிக்காகப் பாடுபடுவோர் சபிக்கப்பட்டவர். ஏனெனில், இவ்வுலகம் ஒரு மோசமான வட்டிக்காரன். நமது உழைப்பிற்கு அது நன்றிகெட்டத்தனத்தை மட்டுமே ஊதியமாகத் தருகின்றது" என்று தொன் போஸ்கோ கூறுகின்றார்.

## 04. இளமை

**31) தொன் போஸ்கோ எத்தகையோர் நலனில் அக்கறை செலுத்துகிறார்?**

"நீ இளைஞன்! அதுபோதும் எனக்கு உன் நலனில் நான் பெரிதும் அக்கறை செலுத்த" என்கின்றார் தொன் போஸ்கோ.

**32) மனித வாழ்வின் வசந்த காலம் எது?**

"வாலிபம் (இளமை)தான் மனிதவாழ்வின் வசந்த காலம் என்பது நினைவிருக்கட்டும்!"

**33) இளைஞர்களுக்குத் தொன் போஸ்கோ கூறும் அறிவுரை என்ன?**

"இளைஞர்களே, குதியுங்கள்! ஓடுங்கள்! ஆடுங்கள்! விருப்பம்போல் கத்துங்கள்! ஆனால் பாவத்தை மட்டும் கொள்ளை நோயெனக் கருதி விலக்குங்கள்! விண்ணரசை உறுதியாகப் பெறுவீர்கள்!" என்று அறிவுரை கூறுகின்றார்.

**34) எவை எளிதில் எரியக் கூடியன?**

"இளமை, மது இரண்டுமே எளிதில் எரியக் கூடியவை."

**35) இளமை நிலையற்றது என்பது குறித்துத் தொன் போஸ்கோ எங்ஙனம் எச்சரிக்கின்றார்?**

"உங்கள் அகவை நீண்டுகொண்டே போகும் என்று மனக்கோட்டை கட்ட வேண்டாம். சாவு திடீரெனத் தாக்கி உங்களைத் துன்பத்துக்குள்ளாக்கும். எனவே, தூய்மையில் நிலைத்திருந்து, சாவை எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருங்கள்" என்று எச்சரிக்கின்றார்.

**36) இளையோருக்குக் கற்பித்தலின் அவசியம் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகின்றார்?**

"நீங்கள் நன்மை புரிய வேண்டுமா? இளையோருக்குக் கற்பியுங்கள். நீங்கள் தூய பணி செய்ய வேண்டுமா? இளையோருக்குக் கற்பியுங்கள். இப்போதும் எப்போதும் உண்மையில் தூயவற்றிற்கெல்லாம் தூய பணி இஃது ஒன்றே" என்கின்றார்.

**37) அன்பைப் புரிந்துகொள்ளும் இளையோரின் திறன் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகிறார்?**

"இந்த இளைஞர்கள் அனைவரும் பிறர் தங்களுக்குச் செய்கின்ற நன்மையை உணர்ந்து கொள்ளத்தக்க அறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். கட்டளைகளில் முதன்மையானதும், கடவுள் மனிதகுலத்தின் மீது வைத்துள்ளதுமான அன்பை அவர்கள் உள்வாங்கிக் கொள்ள நாம் தொடர்ந்து முயல்வோமாக!" என்கின்றார்.

**38) இளையோர் மீது இயேசுவின் தாய்க்குள்ள பாசம் குறித்துத் தொன் போஸ்கோ கூறுவது என்ன?**

"இளைய வயதிலிருப்பவர்களை மரியன்னை அன்பு செய்கின்றார். ஆகவே இளையோரே, அடிக்கடி அவரை (மரியாவை) அழைப்பதில் உறுதியாய் இருங்கள்!" என்று கூறுகின்றார்.

**39) இளைஞரை அன்பு செய்வது குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகிறார்?**
“இளைஞன் அன்பு செய்யப்படுகிறான் என்று அறிந்திருப்பதோடு, அவனை அன்பு செய்கின்ற ஒருவர் எல்லா நன்மைகளையும் அடைவதோடு, இளைஞரிடமிருந்து அவர் அன்பைப் பெறுவது உறுதி” என்று மொழிகின்றார்.

**40) இளைஞரைக் கெடுப்பதில் முதலிடம் பெறுவது எது?**
“கெட்ட இலக்கியத்தைவிட இளைஞர்களைக் கொல்லக் கூடிய நஞ்சு பிறிதில்லை. கெட்ட நூல்கள் அதிக அளவில் இருப்பதோடு, நல்ல நூல்கள் போல் வேடம் தரித்து வருவதால், மற்ற அனைத்தையும்விட கெட்ட இலக்கியம் இளைஞர்களைக் கெடுக்கின்றது.”

## 05. இறைப்பற்று

**41) உன் செயலை ஆண்டவரை நோக்கி நீ எங்ஙனம் திருப்பலாம்?**
“ஆண்டவரே, இப்பணியை உமக்கு அர்ப்பணிக்கின்றேன். இதனை ஏற்று ஆசீர்வதியும்” என்று கூறிச் செபித்து, உன் செயல் ஒவ்வொன்றையும் ஆண்டவரை நோக்கித் திருப்பு.

**42) இறைப்பணியில் நாம் எங்ஙனம் ஈடுபட வேண்டும்?**
“தூய, மலர்ந்த முகத்தோடு இறைப்பணி புரிவோம்! முகமலர்ச்சி கொள்க! உண்மையானதாக, பாவத்திலிருந்து விடுபட்ட தூய மனச்சான்றிலிருந்து உருவானதாக அஃது அமையட்டும்.”

**43) ஒருவர் உண்மையான மகிழ்ச்சியோடு இருக்க என்ன செய்ய வேண்டும்?**
“கடவுளுடன் ஒப்புரவோடு இருந்தாலன்றி, உலகில் எவரும் உண்மையான மகிழ்ச்சியோடு இருக்க முடியாது.”

**44) கடவுள் தம் விருப்பம்போல் பகிர்ந்தளிக்கும் இரண்டு யாவை?**
“வாழ்வும் சாவும் கடவுளின் கைகளில் உள்ளன. தமது விருப்பம்போல் அவர் அவற்றைப் பகிர்ந்தளிக்கின்றார்.”

**45) கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவு எங்ஙனம் அமைதல் வேண்டும்?**
“கடவுளை அன்பு செய்வோம்! ஒருபோதும் அவரை மனம் நோகச் செய்யாதிருப்போம்! கைம்மாறாக நமது தேவைகள் அனைத்தையும் அவர் நிறைவேற்றுவார்.”

**46) நமது கண், கால், கைகள் எந்த நோக்கத்திற்காக இயங்க வேண்டும்?**
“நம் கண்கள் கடவுளுக்காகவே பார்க்கட்டும்! நம் பாதங்கள் கடவுளுக்காகவே நடக்கட்டும்! நம் கைகள் அவருக்காகவே உழைக்கட்டும்!”

**47) நமது பயணத்தின் தண்டவாளங்கள் எவை?**
“இறை நம்பிக்கை மற்றும் இறைப்பற்றுறுதியில் தொடர்ந்து பயணித்தல், இவை இரண்டும் இல்லாத அரசுகள் எவையும் வீழ்ந்து போயின. மனித வேலைகள் அனைத்தும் பயனிழந்தன.”

**48) சாத்தானை எதிர்த்து நிற்க நாம் அணிய வேண்டிய கவசம் எதுவென தொன் போஸ்கோ கூறுகின்றார்?**
“சாத்தானை எதிர்த்து நிற்க, இறை நம்பிக்கை என்ற கவசத்தை அணிந்து கொள்ளுங்கள்!” என்று கூறுகின்றார் தொன் போஸ்கோ.

**49) இறைவனுக்கு நமது நன்றியை எங்ஙனம் வெளிப்படுத்தலாம்?**
"அவரது சித்தத்தை (திருவுளத்தை) ஏற்று நடப்பதன் மூலமும், அவரது விதிமுறைகளைக் கடைபிடிப்பதின் மூலமும் இறைவனுக்கு நமது நன்றியை வெளிப்படுத்தலாம்."

**50) படைபலமா? இறைபலமா? எது பெரியது?**
"கடவுள் பக்கபலமாக இல்லாதபோது படைபலம் அனைத்தும் வீணாகும்."

## 06. கல்வி

**51) கற்போர் தேனீக்களைப் பின்பற்ற வேண்டும் என்பதற்குத் தொன் போஸ்கோ கூறும் காரணங்கள் யாவை?**
"தேனீக்கள் தேனைச் சேகரிக்கும்போது, தன்னிச்சையாக இயங்காமல் குழுக்களாக ராணியின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அடுத்து, ஒரே மலரை மட்டும் நாடாமல் பல மலர்களையும் நாடுகின்றன. மூன்றாவதாக, மலர்களின் மற்ற நலன்களைத் தவிர்த்துத் தேனை மட்டுமே உறிஞ்சுகின்றன" என்பதால், கற்போர் தேனீக்களைப் பின்பற்ற வேண்டும்.

**52) தொன் போஸ்கோவின் கல்விமுறை பற்றிக் கூறுக.**
"கல்விமுறையில் இயற்கை நெறி, இறை நெறி என்ற இரு வகையான முறைகளைத் தோற்றுவிக்கின்றேன். இவற்றுள் இறை நெறி என்பது குதிரை வாயில் கடிவாளம் போலும், இயற்கை நெறி என்பது சேணம் போலும் அமைந்து, மாணவனை ஒழுங்குபடுத்திக் கல்வியில் கவனம் செலுத்த உதவுகின்றன" என்று தொன் போஸ்கோ தமது கல்வி முறைமை பற்றிக் கூறுகிறார்.

**53) கல்வியறிவு பெறுவது, காலத்தைப் பயன்படுத்துவது இவை குறித்த தொன் போஸ்கோவின் கருத்து யாது?**
"ஒரு கணப்பொழுதைக்கூட வீணாக்காமல் உழைப்பது, அறிவு பெறுவதற்கான வழியாகும். படிப்புக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை அதற்கென்றே செலவிடுக" என்பது தொன் போஸ்கோவின் கருத்து.

**54) உண்மைக் கல்வி அமைய உதவும் இன்றியமையாத இரு பண்புகள் யாவை?**
"தன்னம்பிக்கையும், அன்பும் இல்லாமல் உண்மையான கல்வி அமையாது."

**55) தவறான படிப்பினைகள் குறித்துத் தொன் போஸ்கோ கூறும் செய்தி யாது?**
"தவறான படிப்பினைகள் மனதில் எளிதில் பதிந்துவிடுகின்றன, ஆனால், அவற்றை எதிர்த்து வாதாடி அவை தவறென மெய்ப்பிக்க, திறமையும் அறிவும் தேவை."

**56) இளையோருக்கு நல்ல கல்வி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்துத் தொன் போஸ்கோவின் எச்சரிக்கை யாது?**
"இளையோர் நற்கல்வி பெற்றால், அறநெறியுள்ள ஒழுங்குமுறை நிலவும்; இல்லையேல் தீமையும் ஒழுங்கின்மையும் மேலோங்கும்" என்கின்றார் தொன் போஸ்கோ.

**57) படிக்க வேண்டியதன் நோக்கம் எது? செல்வத்துள் செல்வம் எது?**
"பெருஞ்செல்வராக வேண்டுமென்ற, நற்பண்புகளால் பெருஞ்செல்வராக வேண்டுமென்ற நோக்கோடு படியுங்கள். ஏனெனில் தூயதான இறையச்சமே செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வம்."

**58) கல்வித் திறன் எதற்குப் பயன்பட வேண்டும்? எதற்குப் பயன்படக் கூடாது?**

"பொருளீட்டத் தேவையான திறமைகளை வளர்க்கவே நீ படிக்கின்றாய். பிறரின் உழைப்பில் நீ பிழைக்கின்றாய் என யாரும் உன்னைப் பார்த்து என்றும் சொல்லக் கூடாது."

**59) 'கல்வி பெறுவதில் கடின முயற்சி தேவை' என்பது குறித்துத் தொன் போஸ்கோ கூறுவன யாவை?**

"கற்றலுக்குக் கடின முயற்சி தேவை. அம்முயற்சி மதிநுட்பத்திற்கேற்ப மாறுபடும். முயற்சியைக் கைவிடாதீர்கள்! கடினமானவைகளையும், புரியாதவற்றையும் புறந்தள்ளி, எளிமையானவற்றை மட்டுமே பயில்வது பிழையாகும்" என்கிறார் தொன் போஸ்கோ.

**60) நற்கல்வி, நல்ல குடிமக்களை உருவாக்கும் என்பது குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகின்றார்?**

"நல்லதொரு சமுதாயம் அமைய வேண்டுமாயின், நமது ஆற்றல் முழுவதையும் இளையோரின் கல்விமீது ஒருமுகப்படுத்த வேண்டும். இது குறித்த எனது அனுபவம் எனக்குக் கற்பிப்பது இதுதான். நற்பண்புள்ள சமுதாயத்தைக் கட்டியமைக்க விரும்பினால், நமது இளையோர் கல்வி பெறுவது குறித்து நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்" என்று தொன் போஸ்கோ கூறுகின்றார்.

## 07. செயல் திறம்

**61) செயலாற்றுவது குறித்துத் தொன் போஸ்கோ கூறுவன யாவை?**

"செயலாற்றும்போது உன் முழுத்திறனையும் பயன்படுத்து. உன்னால் முடியாததைக் கடவுள் முடித்துத் தருவார்" என்று கூறுகின்றார் தொன் போஸ்கோ.

**62) நம் கடமைகளை நாளைக்கென நாம் ஏன் தள்ளிப் போடக் கூடாது?**

"இன்றே செய்யக்கூடிய நன்மையை நாளைக்கென ஒதுக்காதே, நாளை என்பது வராமலேயே போகலாம்" என்பதால் நம் கடமைகளைத் தள்ளிப் போடக் கூடாது.

**63) இடர்பாடுகள் எப்போது காணாமல் போகும்?**

"தடைகளை வெல்லும்வரை ஊக்கத்துடன் முயற்சி செய்தால், இடர்பாடுகள் காணாமற் போகும்."

**64) நமது செய்கையில் நமது மனநிலை எங்ஙனம் அமைதல் வேண்டும்?**

"எதைச் செய்தாலும் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் தருவதாக நமது மனநிலை அமைய வேண்டும்."

**65) பணியாற்றுவதில் நமது மனோநிலை எங்ஙனம் அமைதல் வேண்டும்?**

"பணியாற்று! ஆனால், உன் உழைப்பு உன் ஆற்றலுக்கு ஏற்பவே அமையட்டும்."

**66) உழைப்புக் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகிறார்?**

"இறைமன்றாட்டு முதன்மையானது, இறைமன்றாட்டுடன் இணைந்து உழைக்க வேண்டும். உழைக்காதவன் உண்ண தகுதியற்றவன்" என்கின்றார் தொன் போஸ்கோ.

**67) தொன் போஸ்கோ, தாம் செயல்படும் விதம் குறித்து என்ன கூறுகிறார்?**

"என் வாழ்நாளில் இதுவே கடைசிப் பணி என்பதுபோல் ஒவ்வொன்றையும் கவனமுடன் செய்வேன். செயல்திட்டம் போடும்போது நெடுங்காலம் வாழப்போவது போல் திட்டமிடுவேன்" என்று கூறுகின்றார்.

**68) மனித உழைப்புக் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகின்றார்?**
"மனிதன் உழைக்கப் பிறந்துள்ளான். அன்போடும் ஊக்கம் தளராமலும் உழைக்கிறவனுக்கு வேலை எளிதாகின்றது" என்கின்றார்.

**69) உழைக்கும் பாங்கிற்குத் தொன் போஸ்கோ யாரை உவமையாக்குகிறார்?**
"தூய பிரான்சிஸ்கு சலேசியாரைப் போல கனிவோடும், யோபுவைப் போலப் பொறுமையோடும் உழைக்க வேண்டும்" என்று தொன் போஸ்கோ உவமம் கூறுகிறார்.

**70) உழைப்போடு ஒழுக்கத்தைத் தொன் போஸ்கோ எங்ஙனம் இணைக்கின்றார்?**
"உழைப்புதான் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் அரண்" என்று தொன் போஸ்கோ கூறுகிறார்.

## 08. சோம்பல்

**71) நாம் கடமையாற்றத் தடையாக இருப்பவர்கள் யாவர்?**
"சோம்பலையும் சோம்பேறிகளையும் விலக்குக! கடமைகளைக் கருத்தூன்றிச் செய்க" இவையே நாம் கடமையாற்றத் தடையாக இருப்பவை.

**72) நம்மிடத்தில் சாத்தான் விரும்புவதும், வெறுப்பதும் எவை?**
"சாத்தான் பெரிதும் விரும்புவது நீங்கள் சோம்பி இருப்பதை! அவன் மிகவும் வெறுப்பது உங்கள் சுறுசுறுப்பை."

**73) நமது மிகப்பெரும் பகைவன் யார்?**
"சோம்பல் தான் உன் மிகப் பெரும் பகைவன். தலைதூக்க விடாதவாறு அதை எதிர்த்துப் போராடு!" என்கின்றார் தொன் போஸ்கோ.

**74) ஓய்வில் இருத்தல் என்பதன் பொருள் சோம்பியிருத்தல் – சரியா?**
"ஓய்வுக்குப் பொருள் சோம்பியிருத்தல் அன்று."

**75) சாத்தானின் தொழிற்சாலை எது?**
"சோம்பிக் கிடக்கும் மூளை, சாத்தானின் தொழிற்சாலை!"

**76) தீமைகளின் ஆசானும் தந்தையும் யார்?**
"தீமைகள் அனைத்தையும் சோம்பல் நமக்குக் கற்பிக்கும். ஏனெனில் தீமைகளின் தந்தை அது."

**77) சோம்பலும் ஒழுக்கக்கேடும் எங்ஙனம் ஒத்துப்போகின்றன?**
"சோம்பலோடு ஒழுக்கம் ஒத்துப்போகாது. ஆகவே நீ சோம்பியிருக்கையில் ஒழுக்கத்திற்கு எதிரான தீமையை மேற்கொள்கிறாய்" என்கிறார் தொன் போஸ்கோ.

**78) சோம்பலை எங்ஙனம் வெல்லலாம்?**
"அறிவு மற்றும் ஆன்மீகம் சார்ந்த படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்துவதன் மூலம் சோம்பலை வெல்லலாம்."

**79) சோம்பேறிகளுக்கு விண்ணரசு உண்டா?**
"விண்ணரசு சோம்பேறிகளுக்காக உண்டாக்கப்பட்டதன்று."

**80) தொன் போஸ்கோவின் அறையில் என்ன எழுதப்பட்டிருந்தது?**
"ஒவ்வொரு மணித்துளியும் ஒரு புதையல்" என்று எழுதப்பட்டிருந்தது.

## 09. நட்பு

**81) நண்பனோடு எவ்வாறு ஒப்புரவாதல் வேண்டும்?**
"உன் நண்பன் மீது உனக்கு ஏதாவது மனத்தாங்கல் இருப்பின், அதுபற்றி அவனோடு அச்சமின்றிப் பேசி ஒப்புரவாகுக. உள்ளக் குமுறலைச் சுமந்து திரிய வேண்டாம்."

**82) தீய நண்பர்கள் யாவர்? அவர்களை என்ன செய்ய வேண்டும்?**
"கடவுளைப் பழிக்கின்ற, திருடுகின்ற, இறையச்சமில்லாதவர்கள் தீய நண்பர்கள். அவர்களை விலக்கி விட வேண்டும்."

**83) யாரை நண்பனாகக் கருதக் கூடாது?**
"மிகைப்படப் புகழ்பவனை நண்பனாகக் கருதற்க."

**84) நண்பர்களின் நன்மதிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?**
"உன்னை, உன் நண்பர்கள் மதிக்க வேண்டுமா? அப்படியாயின், அனைவரையும் உயர்வாக மதித்து, அவர்களுக்கு உதவிட காத்திரு. அப்போது நீ மகிழ்ச்சியில் திளைப்பாய்."

**85) நாம் விலக்க வேண்டிய, நெருங்க வேண்டிய நண்பர்கள் யாவர்?**
"கெட்ட நண்பர்களை விலக்கு, நல்ல நண்பர்களோடு நெருங்கிப் பழகு!"

**86) கெட்ட நண்பர்கள் குறித்துத் தொன் போஸ்கோ என்ன கூறுகின்றார்?**
"கெட்ட நண்பர்களை விலக்காதவரை நீ பேராபத்தில் சிக்கியுள்ளாய் என்பதனைக் கருத்தில் கொள்க. உண்மையில் நீயும் தீயவனாகிவிட்டாய் என்றெண்ணி அஞ்சுக!" என்கின்றார்.

**87) நல்ல நண்பர்களை நாம் எங்ஙனம் தெரிவு செய்ய வேண்டும்?**
"நற்பெயரெடுத்த கூட்டத்திலிருந்து உன் நண்பர்களைத் தெரிவு செய்க. நல்லவர்களுக்குள்ளும் மிகுந்த நல்லவர்களையே நண்பராக்கு!"

**88) நண்பர்களிடத்தில் எதைப் பின்பற்ற வேண்டும்? எதைப் பின்பற்றக் கூடாது?**
"நண்பர்களோடு பழகும்போது, அவர்களின் நற்பண்புகளை மட்டுமே பின்பற்ற வேண்டும். குறைபாடுகள் அவர்களிடத்திலும் இருக்கலாம். அவற்றைப் பின்பற்றக் கூடாது."

**89) சாவு உன்னை அச்சுறுத்தாதிருக்க நீ என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது?**
"செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்! தீய பேச்சு மற்றும் பெருந்தீனியில் திளைக்காதே! இறையருள் பெறுவதில் இனிது மகிழ்! அப்போது சாவு உன்னை அச்சுறுத்தாது."

**90) நாம் விலக்க வேண்டிய 'கெட்டவர் இருவர்' யாவர்?**
"கெட்ட நண்பர்கள், கெட்ட நூல்களிலிருந்து விலகி நில்!"

## 10. நடத்தை

**91) உனது இன்றைய செயல் எப்படி அமைய வேண்டும்?**
"உன் செயல் குறித்து நாளை நீ வெட்கப்படத் தேவையில்லாத வகையில் இன்று அஃது அமைய வேண்டும்."

**92) யார் இழிமகன்?**
"தன் தந்தைபற்றி இழிவாகப் பேசுபவன் இழிமகன் என்று உறுதியாகக் கூறிவிடலாம்."

**93) எத்தகையவரை நாம் தூர விலக்க வேண்டும்?**
"உன் முகத்துக்கு முன்பாக, இடறலான, இருபொருள் தருகின்ற இழிசொல் பேச நாணாதவனை விட்டுத் தூர விலகு."

**94) குற்றம் புரிந்தவன் என்ன செய்யக் கூடாது? என்ன செய்ய வேண்டும்?**
குற்றம் புரிந்தவன், "சாக்குச் சொல்லி குற்றங்களை மழுப்ப முயலாமல், திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்!"

**95) நல்லொழுக்கத்தின் முப்பரிமாணங்கள் எவை?**
"நல்லொழுக்கம் என்பது சரியான ஒழுங்கான பேச்சு, செயல் மற்றும் நடத்தை ஆகும்."

**96) முற்றிலும் நல்லவனின் நாற்குணங்கள் யாவை?**
"உண்டு குடித்து உறங்குவதில் மிதமாக இருப்பவன், நேர்மையானவன், கவனமுள்ளவன், தாராளன்" இவையே முற்றிலும் நல்லவனின் நாற்குணங்கள்.

**97) யாரையும் காயப்படுத்தக்கூடிய எழுத்துப் பதிவு ஏன் கூடாது?**
"எவரையும் காயப்படுத்தும் வகையில் எழுத்தில் பதியாதே; ஏனெனில், எழுதியது எழுதியதே!"

**98) அறிவு குறித்துத் தொன் போஸ்கோவின் எச்சரிக்கை யாது?**
"ஒழுக்கமற்ற அறிவு, ஆன்மாவின் அழிவு என்பதை நெஞ்சில் நிறுத்துக!" என்று எச்சரிக்கின்றார்.

**99) நோயின்றி நெடுங்காலம் வாழ நமக்குத் தேவையான நான்கு எவை?**
உடல் நலத்தில் மகிழவும், நெடுங்காலம் வாழவும் தேவையாக இருப்பவை பின்வரும் நான்கு.

1. குற்றமற்ற மனச்சான்றுடன் உறங்கச் செல்லுதல்.
2. மிதமாக உணவருந்துதல்.
3. சுறுசுறுப்பாக, ஆற்றல் குறையாமல் வாழ்தல்
4. நல்ல நண்பர்களைப் பெற்றிருத்தல்.

**100) கண்ணடக்கம் குறித்துத் தொன் போஸ்கோ தரும் எச்சரிக்கை யாது?**

"பாவம் ஆன்மாவுக்குள் நுழையும் பலகணிகள் கண்களே. ஆதலின், அவற்றைக் கவனமாகக் காத்துக் கொள்ளுங்கள்" என்று தொன் போஸ்கோ கூறுகிறார்.

---

***"நீ இளைஞன்! அதுபோதும் எனக்கு உன் நலனில் பெரிதும் அக்கறை செலுத்த!"***
– தொன் போஸ்கோ.